**களணி ஆற்றின் மீது புதிய பாலத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் - 2022**

---

களணி ஆற்றின் மீது புதிய பாலத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடியவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சாகிய தற்போதைய போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகும். அதிக நடமாட்டமுள்ள ஒரு இணைப்பாக களணி ஆற்றின் மீது ஒரு புதிய ஒரு பாலத்தினை நிர்மாணிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலினைக் குறைத்தல் மற்றும் பரவச் செய்தல் மூலம் கொழும்பு நகரத்தின் போக்குவரத்து வலைப்பின்னலை மேம்படுத்துவதற்கும் பொருளாதார அபிவிருத்தியினை உயர்த்துவதற்கும் பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது இரும்பு பாலப் பிரிவு, மற்றும் மேலதிக வலுப்படுத்தல் பிரிவு ஆகிய 02 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 55,313 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 41,429 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 46,755 மில்லியனுக்குச் சமனான ஜப்பான் யென் 35,020 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு செய்யப்பட்டது. ரூபா 8,558 மில்லியன் மிகுதித் தொகையானது இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2014 யூலை 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் முறையே 2021 நவம்பர் 25 ஆந் திகதி மற்றும் 2021 ஒக்தோபர் 25 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்யும் திகதி 2024 யூலை 01 ஆந் திகதி வரையும் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு அவதானிப்புக்கய் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 39 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின் மாற்றங்களினால் விளையும் இலாபம் அல்லது நட்டம் ஒரு காசோட்டம் அல்லாததுடன் ஆரம்பத்திலும் இறுதியிலுமுள்ள காசும் காசுக்குச் சமனானவைகளையும் ஒப்பீடு செய்து தொடர்புபட்ட விளைவுகள் அறிக்கையிடப்படுதல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது நாணயமாற்று விகிதத்தின் மாற்றங்களினால் உருவாகிய பெறுமதியானது நியமத்தின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | 31,640 | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 55 அம் பந்தியில் குறிப்பிட்ட வழிகாட்டிகளின் தேறப்படாத நட்டங்களானது காசோட்ட கூற்றின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும் |
| (ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக இரண்டு வங்கிகளிடமிருந்து ஒரு கடனாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 445.06 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அக்கடன் தொகை தொடர்பான கடன்பெறுதல் கிரயமானது செயற்திட்டத்தின் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 04 இற்கு இணங்க செயற்திட்ட செலவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | வீதி அபிவிருத்தி அதிகார சபை அதனது சில செலவுகளை மேற்கொள்வதற்காக கடன்களை பெற்றிருந்ததுடன் இதில் ஒரு பகுதியான ரூபா 445.06 மில்லியன் தொகையானது தற்காலிக நிதியளிப்பாக அவசர காணிச் சுவீகரிப்பிற்கு இச்செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் கடன் பெற்றுக்கொண்டிருக்காததனால் மேற்கூறிய கடனின் கடன் பெறுதல் கிரயத்தினை இச்செயற்திட்டத்தினால் கணக்கீடு செய்யமுடியாதுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும் |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 ஆந் திகதிய முகாமைத்துவ கூற்றறிக்கையின் உப உறுப்புரை 9.3 ஆம் உப உறுப்புரை | சுற்றறிக்கைக்கு இணங்க மீளாய்வாண்டில் செயற்திட்ட ஒழுங்குபடுத்துதல் குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக செயற்திட்ட ஒழுங்குபடுத்துதல் குழுக் கூட்டத்தினை நடாத்த முடியவில்லை. | எடுத்துரைக்கப்பட்ட வகையில் ஒழுங்குபடுத்தல் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுதத்தல் வேண்டும். |

### 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022/2023 ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட 16 பாதிப்புக்களை திருத்தம் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் நடவடிக்கை எடுக்காதிருந்த போதிலும் செயற்திட்டம் இது தொடர்பாக 2023 யூன் 30 ஆந் திகதி வரையும் எந்த நடவடிக்கையையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதிப்புக்கள் அறிவிப்புக் காலப்பகுதி 2023 நவம்பர் காலாவதியாவதற்கு முன்னர் அனைத்து பாதிப்புக்களும் திருத்தம் செய்யப்படும். | பட்டியல்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் நிர்மாண வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 24.45 மில்லியன் செலவு செய்து ஒரு தொலைத்தொடர்பு கட்டிடம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும் இக்கட்டிடத்தில் செயற்பாட்டு நோக்கங்களுக்காக ஒரு இலத்திரனியல் உபகரணமும் பொருத்தப்பட்டிருந்தது. எனினும் கட்டிடமும், கமரா முறைமையும் 2023 யூன் மாதம் வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இக்கட்டிடத்திற்காகப் பொருத்தப்பட்ட இரண்டு வாயு சீராக்கிகளின் இரண்டு உள்ளக பாகங்கள் கள்வர்களால் அகற்றப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தன. எனினும் இது | தற்பொழுது கமரா முறைமையை பொருத்துதல் தொடர்பான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. ஆகவே கமரா முறைமையானது தற்பொழுது செயற்படும் நிலையில் உள்ளன. இலத்திரனியல் உபகரணங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் EOM&M பிரிவு தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நிதிப்பிரமாணத்தின் நி.பி 104 இற்கு இணங்க வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் | கட்டிடம் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நி.பி 104 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீள் ஏற்றுமதி உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள் அவற்றின் பெறுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட திகதி என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் உபகரணங்களின் ஒரு பகுதி 2023 யூன் மாத்தில் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட அதே வேளை மற்றுமொரு பகுதி நாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆகவே அரசாங்கத்திற்கு ஏற்பட்ட வரி நட்டத்தை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | மீள் ஏற்றுமதி வகுதியின் கீழ் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட நிர்மாண இயந்திரங்களும் ஏனைய உபகரணங்களும் அமைச்சினால் வழங்கப்பட்ட கூட்டிணைந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் இலங்கை சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்தக்காரரினால் இப்பொருட்கள் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட போது இலங்கை சுங்கத்தினால் இந்த கூட்டிணைந்த உத்தரவாதம் விடுவிக்கப்பட்டது. | வேண்டப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்வேறு தரப்பினர்களுக்குச் சொந்தமான 968 காணித்துண்டுகளை உள்ளடக்கிய 12.9 ஹெக்டயர் பரப்பளவான காணி ரூபா 1,134.94 மில்லியன் செலவு செய்து செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் காணிச் சவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவிற்கு இணங்க காணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு 2023 யூன் 06 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | நிர்மாண வேலைகளுக்காக பயன்படுத்திய 968 காணித்துண்டுகளில் பல அதிகாரமற்ற நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட/ குடியேரியுள்ள அரசாங்க காணிகளாக இருந்தன. ஆகவே அந்த அரசாங்க காணிகள் தொடர்பாக காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவினை பிரசுரிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. ஏனைய காணிகள் தொடர்பாக 44 ஆம் பிரிவின் கீழான பதிவு செய்தல் செயன்முறையானது தொடர்ந்து செய்யப்படுகின்றது. | காணிச் சுவீகரிப்பு செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |